110

S1.no 7

சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 26 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் Smart Class Room என்னும் புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 132

நாள் 29.12.2015

மன்மத, மார்கழித்திங்கள் 13 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டன:–

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். க4/24743/2015, நாள் 23.09.2015 மற்றும் 29.09.2015.

******

ஆணை :

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.08.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பாக சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் கீழ்க்கண்ட அறிவிப்பும் ஒன்றாகும்:–

> "பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கணினி மூலமாக பாடங்களை பயிற்றுவிக்கும் வகையில், அறிவுத் திறன் வகுப்பறை ஏற்படுத்தப்பட்டதை போன்று பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில், ரூ.1,31,00,000/– செலவில் 26 பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஓர் அறிவுத்திறன் வகுப்பறை, அதாவது Smart Class Room ஏற்படுத்தப்படும்."

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் விரிவான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துருவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 1,125 ஆதி திராவிடர் நல தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும், 306 பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளும் இயங்கி வருகின்றன என்றும், இவற்றில் 26 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன என்றும், இந்த 26 பள்ளிகளில் 1,850 மாணவ / மாணவியர்கள் பயின்று வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் ஆதி திராவிடர் நல இயக்குநர், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவியர்கள் பொதுப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவியரை ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த அளவிலேயே மதிப்பெண்கள் பெற்று வருகின்றனர் என்றும், இவர்கள் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் குறைந்த அளவில் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறுவதால், 11 ஆம் வகுப்பு பயில்வதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன என்றும், இந்நிலையில் பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறுவதால், அவர்கள் 11 ஆம் வகுப்பில் அறிவியல் மற்றும் கணிதப் பாடப் பிரிவுகளில் பயின்று மருத்துவம் மற்றும் பொறியியல் ஆகிய தொழிற்கல்வி பயில வாய்ப்புகள் கிடைக்கப் பெறுகின்றன என்றும், ஆனால் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் குறைந்த அளவிலேயே மதிப்பெண்கள் பெறுவதால், அவர்களுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் பயிலும் வாய்ப்பு கிடைக்கப் பெறுவதில்லை என்றும், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் குடும்பம் சமுதாயத்திலும், பொருளாதார நிலையிலும் மிகவும் பின்தங்கி உள்ளதால், பெரும்பான்மையான மாணவ / மாணவியர்கள் விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் நிலை ஏற்படுகிறது என்றும், வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கும் வீட்டில் பாடங்களை மீண்டும் படிக்கும் அளவிற்கு வசதிகள் இல்லை என்றும், எனவே, பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் முழுமையாக பள்ளியில் பயிற்றுவிக்கும் பாடங்களை மட்டுமே நம்பி இருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

4. எனவே, பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவியர்களின் கல்வித்திறனை மேம்படுத்தவும், அவர்கள் கல்வி பயில்வதற்கான ஆர்வத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தவும் பாடங்கள் எளிமையாகப் புரியும்படி கல்வி கற்பிக்க ஒரு புதியமுறை கொண்டு வரப்பட வேண்டும் என்றும், அந்த புதிய முறை மூலம் கல்வி கற்பிக்கப்பட்டால், மாணவ / மாணவியர்களுக்கு கல்வி பயில்வதில் அதிக ஆர்வமும், உற்சாகமும் ஏற்பட்டு அவர்கள் அதிக அளவில் மதிப்பெண்கள் பெற வாய்ப்பு உண்டாகும் என்றும், அந்த அடிப்படையில் தற்போது தனியார் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதைப் போல, பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் (Smart Class Rooms) கட்டாயமாக தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். மாணவ / மாணவியர்கள் ஆர்வமுடனும், உற்சாகத்துடனும் கல்வி பயிலும் வகையிலும், ஆசிரியர்களும் முழு ஈடுபாட்டுடனும், ஆர்வத்துடனும் புதிய முறையில் மாணவ / மாணவியர்களுக்கு பாடம் கற்பிக்கும் வகையிலும், பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகளை ஏற்படுத்தி, மாணவ / மாணவியர்களுக்கு கணினி வழியாக எளிதில் பாடங்கள் புரியும்படி கல்வி கற்பிக்கும் முறையைக் கொண்டு வந்தால், இதுவரையில் மாணவ / மாணவியர்கள் கற்பனைத் திறனில் பயின்று வந்ததை தற்போது கணினி வழியாக நேரில் காண இயலும் என்றும், இதனால் மாணவ / மாணவியர்களின் புரிதல்திறன் மேம்பட்டு பாடங்களின் கருத்துக்கள் மனதிலும், நினைவாற்றலிலும் நிரந்தரமாக எளிதில் பதிய வாய்ப்பு உண்டாகும் என்றும், முக்கியமாக கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் போது மாணவ / மாணவியர்கள் பாடப்பகுதி நிகழ்வுகளை நேரில் பார்த்து நன்கு புரிந்து கொள்ள முடியும் என்றும், அறிவுத்திறன் வகுப்பறைகள் மூலம் கல்வி கற்பிக்கும் முறை தனியார் பள்ளிகளில் செயல்பாட்டில் உள்ளதென்றும், சென்னை மற்றும் கோவை மாநகராட்சிப் பள்ளிகளிலும் இந்த முறை செயல்பாட்டில் உள்ளதென்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. அந்த அடிப்படையில், முதற்கட்டமாக அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் கல்வித் திறனை மேம்படுத்த, ஒரு பள்ளிக்கு ஒரு அறிவுத்திறன் வகுப்பறை (Smart Class Room) என்ற அடிப்படையில் 26 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகளை அமைக்கலாம் என்றும், அப்பள்ளிகளில் ஏற்கெனவே இருக்கும் ஒரு வகுப்பறையை (20 அடி X 20 அடி) அறிவுத்திறன் வகுப்பறையாக மாற்றிக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ள ஆதி திராவிடர் நல இயக்குநர், ஒரு பள்ளியில் அறிவுத்திறன் வகுப்பறை அமைப்பதற்கான தோராயச் செலவினத்தை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| 1. | Electronic Interactive Board | Rs.88,000 |
| 2. | Teachers Remote Table | Rs.24,000 |
| 3. | Document Scanner | Rs.24,000 |
| 4. | 18.5" Touch Screen Monitor | Rs.90,000 |
| 5. | Projector | Rs.32,000 |
| 6. | Teacher Computer | Rs.21,000 |
| 7. | Amplifier with mike and wall speaker | Rs.48,000 |
| 8. | Content syllabus | Rs.80,000 |
| 9. | 5 KVA UPS 290 Nos Battery | Rs.98,000 |
| | Total | Rs.5,05,000 |

6. எனவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 26 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு தலா ஒரு அறிவுத்திறன் வகுப்பறை (Smart Class Room) அமைக்கவும், இப்பணியினை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி சட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், அறிவுத்திறன் வகுப்பறைகள் மூலம் கல்வி கற்பிக்க ஒரு பள்ளியில் ஆர்வமுள்ள 2 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கும்படியும், அறிவுத்திறன் வகுப்பறைகள் அமைக்க செலவினமாக ரூ.1,31,30,000/– ( ரூ.5,05,000/– X 26 பள்ளிகள்) ஒப்பளிக்கும்படியும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

7. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 26 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில், ஒரு பள்ளிக்கு தலா ஒரு அறிவுத்திறன் வகுப்பறை (Smart Class Room) அமைக்கவும், அறிவுத்திறன் வகுப்பறைகள் மூலம் கல்வி கற்பிக்க அப்பள்ளியில் ஆர்வமுள்ள 2 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்தும், மேலும் இதன் பொருட்டு கணினி உள்ளிட்ட அறிவியல் சாதனங்கள் வாங்கிட ஒரு பள்ளிக்கு ரூ.5,05,000/– வீதம் 26 பள்ளிகளுக்கு ரூ.1,31,30,000/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தியொரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது :–

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய உபகரணங்கள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000--இன்படி விதிகளை அனுசரித்து வாங்கப்பட வேண்டும்.

(ii) நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் விலை தோராய விலைக்கு கூடுதலாக இருக்கும்பட்சத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அதே சமயத்தில் விலை குறைவாக இருக்கும்பட்சத்தில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் உபகரணங்களை வாங்கிவிட்டு மீதத் தொகை உடனடியாக அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும்.

8. மேலே பத்தி 7--இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:--

" 2225 -- ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -- 02 -- பழங்குடியினர் நலன் -- 277 -- கல்வி I திட்டத்தில் சேராதது AW மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும் பராமரித்தலும் 76 கணினியும் துணைப் பாகங்களும் 01 -- வாங்குதல்.
(த.தொ.கு 2225 02 277 AW 7614) "

9. மேலே பத்தி 7--இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணைகள் நிதி (வரவு--செலவு பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான தொகையினை முன்பணமாக பெறுவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில், இவ்வாணையின் படிகளை இணைத்து நிதி (வரவு--செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2015--2016 ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானியக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. அறிவுத்திறன் வகுப்பறைகளை அமைக்கும் பணியை விரைவாக மேற்கொண்டு, இது குறித்த அறிக்கையினை தவறாமல் அரசுக்கு அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண்.69416/ஆதி(ம)பந/2015--1, நாள் 23.12.2015--இல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1717 ( ஆயிரத்து எழுநூற்றுப் பதினேழு ).

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை -- 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை -- 5.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை -- 8.

முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், நீலகிரி, சேலம், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சி, விழுப்புரம்.
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், நீலகிரி, சேலம், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சி, விழுப்புரம்.
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், நீலகிரி, சேலம், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சி, விழுப்புரம்.

நகல்

முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசுச் செயலர் அவர்களின் முதுநிலைத் தனிச் செயலர், சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது I (ம) II) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்